இது

நம்தேசம்

16.08.2026 - 31.08.2026



போராட்டங்களில் அத்துமீறும் அனுரவின்
ஏவல்த்துறையினர்!

கல்முனை வைத்தியசாலை சீரூடை விவகாரத்தின்
பின்னணியில் அரசாங்கம்?

வரோதய நகர் படுகொலை :
நீதியற்ற 41 ஆண்டுகள்!

நீதிக்கான நீள் பயணம்!

யாழில் இடம்பெற்ற பேரணி மற்றும் மாநாடு

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு, "நீதிக்கான நீள்பயணம்" எனும் தொனிப்பொருளில் சர்வதேச மாநாடு 30.08.2026 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இம்மாநாட்டை முன்னிட்டு, யாழ்ப்பாண நகரில் கவனயீர்ப்பு பேரணியும் இடம்பெற்றது.

பேரணியின் முன்னிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புகைப்படங்கள் பொறிக்கப்பட்ட விசேட வாகனம் சென்றதுடன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது அன்புக்குரியவர்களின் புகைப்படங்களை ஏந்தியவாறு பேரணியில் கலந்துகொண்டனர். பின்னர் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் சர்வதேச மாநாடு நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன், ரவிகரன் ஆகியோரும் உள்ளூராட்சி சபையின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், சர்வதேச இராஜதந்திரிகள் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு, தமது அன்புக்குரியவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான உண்மைகள் முழுமையாக வெளிக்கொணரப்பட்டு, அவர்களின் நிலை குறித்து தெளிவான பதில் வழங்கப்படுவதுடன், பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.













கல்முனை வைத்தியசாலை சீருடை விவகாரத்தின் பின்னணியில் அரசாங்கம்?

- கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி -

சுற்றுநிரூபத்துக்கமைய முஸ்லிம் பெண்கள் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை யில் கலாசார உடையுடன் பணியில் ஈடுப முடியாது என்றால், அவர்கள் எவ்வாறு அதே சுற்று நிரூபத்துக்கமைய கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையில் பணியில் ஈடுப முடியும். எனவே இந்த சீருடை சர்ச்சையின் பின்னணி யில் அரசாங்கம் தான் உள்ளது என்ற சந்தேகம் எழுகிறது என தமிழ் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்ன ம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை 19.08.2026 அன்று நடைபெற்ற பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு வலியுறுத்தினார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

சீருடை சர்ச்சையின் அடிப்படையில் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் முஸ்லிம் பெண் சுகாதார உதவியாளர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டமை கண்டிக்கத்தக்கது. ஒரு சமூகத்தின் கலாசார, மத அடையாளங்கள் மதிக்கப்பட வேண்டியது மனித உரிமைகளின் அடிப்படை பண்பாகும்.

கடந்த இருவாரங்களாகபேசுபொருளாகவுள்ள இந்த விடயத்தில் நேரடியாக தலையிட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. சுற்றுநிருபத்தின்படிதான் இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது .சுற்றுநிருபத்தின்படி கல்முனை வைத்தியசாலையில் கலாசார ஆடையுடன் முஸ்லிம் பெண் சுகாதார உதவியாளர்களும் பணிபுரிய முடியாதென்றால் அவர்கள் எப்படி கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையில் பணிபுரிய முடியும்?

எனவே இந்த ஆடை சர்ச்சையின் பின்னணியில், இரு சமூகங்களை மோத விடும் திட்டத்தில் அரசாங்கம் உள்ளதோ என்ற சந்தேகம் எழுகின்றது.அவ்வாறில்லை என்றால் அந்த 9 முஸ்லிம் பெண் சுகாதார உதவியாளர்களையும் கல்முனை வைத்தியசாலையில் பணிபுரிய அனுமதிக்க வேண்டும். அவர்கள் தமது கலாசார ஆடையுடன் பணிபுரிய முடியுமென அறிவிக்க வேண்டும். தமிழ் மக்கள் மத, கலாசாரங்களை மதிக்கின்றவர்கள். எனவே கல்முனை வைத்தியசாலை ஆடை சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.அதேவேளை முஸ்லிம் மக்களும் எமது கல்முனை வடக்கு பிரதேச செயலக கணக்காளர் நியமனம் தொடர்பிலான கோரிக்கை தொடர்பில் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.



சாப்பிட மட்டும் வாய் திறக்கும் அனுரவின் தமிழ் எம்.பிகள்!

- கடுமையாக சாடிய மனோகணேசன் எம்.பி -

சாப்பிடுவதற்கு மட்டும்தான் அரசாங்கத்தில் இருக்கும் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாய் திறப்பார்கள் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் குற்றம் சாட்டினார்.

கல்முனை சீருடைப் பிரச்சினை குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லா இன மக்களின் ஆதரவைப் பெற்ற ஜனாதிபதி இருக்கிறார். 159 பேரைக் கொண்ட பாராளுமன்ற பெரும்பான்மை இருக்கிறது. இது இரண்டும் சேர்ந்தது தான் அரசு தரப்பாகும். இதற்கு மேல், அமைச்சரவை, பிரதமர், சுகாதார அமைச்சர், தமிழ் பேசும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று இருக்கிறார்கள். இவை அனைத்தும் சேர்ந்ததுதான் அரசாங்கமாகும். இத்தகைய அரசு தரப்பும் அரசாங்கமும் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறுகிறதா? இன்னமும் தாம் எதிரணியில் இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணி நினைக்கிறதா?

இந்த அரசாங்கத்திடம்தான் அனைத்து அதிகாரங்களும் இருக்கின்றன. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, தொடர்புள்ள அனைவரையும் மாவட்ட செயலகத்தில் கூட்டி, சுகாதார அமைச்சர் ஒரே நாளில் முடிவுக்குக் கொண்டுவரவேண்டிய ஒரு பிரச்சினை தான் இந்த கல்முனை சீருடைப் பிரச்சினையாகும்.



இதைச் சரியாகச் செய்யாமல், தமிழ் பேசும் தரப்புகள் சமூக வலைத்தளங்களில் அடித்துக் கொண்டு நாறட்டும், மடியட்டும் என ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி முதல் சுமார் 10 நாட்களாகக் காலத்தைக் கடத்திவிட்டு, இப்போது தற்காலிக தீர்வு என்ற ஒன்றை அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இத்தகைய ஒரு தற்காலிக நடவடிக்கைக்குக் கூட ஏன் இத்தனை தாமதம் ஏற்பட்டது? இதற்குள் எதிரணி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுகாதார அமைச்சரைச் சந்தித்தது ஒரு புறமிருக்க, ஆளுங்கட்சி தேசிய மக்கள் சக்தி அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை என்ன செய்தார்கள்?

உண்மையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியே தத்தமது ஈழத்து, மலையக, முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களிடம் போலி வாய்ச்சவடால் அடிக்கிறார்களே தவிர, உள்ளே சாப்பிட மட்டும் தான் வாயைத் திறக்கிறார்கள் என்ற

02ம் பக்கம் பார்க்க

இராணுவ முகாம்கள், விகாரைகளின் கீழ் தமிழர்களின் எலும்புக்கூடுகள்!

- அகழ்வாராய்ச்சி செய்ய கோரும் ரவிகரன் எம்.பி -

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பரப்பில் அமை க்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களுக்குள்ளும், எவ்வித நிலத்தொடர்புகளுமில்லாமல் அமைக் கப்பட்டுள்ள விகாரைகளுக்குள்ளும் கடந்தகால ங்களில் தமிழ்மக்கள் படுகொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளதாக வன்னிமாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

எனவே தமிழினப் படுகொலைக் குற்றவாளி களை பாதுகாக்கும் அரணாக வடக்கு, கிழக்கி லுள்ள இராணுவ முகாம்களையும், விகா ரைகளையும் பயன்படுத்த வேண்டாம் எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், இராணுவ முகாம்களிலுள்ள இராணுவத்தினரை வெளியேற்றிவிட்டு சர்வதேச மேற்பார்வையில் இராணுவ முகாம்களையும், விகாரைகளையும் அகழ்வாய்விற்கு உட்படுத்தி உண்மைகளை வெளிப்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளார்.

செம்மணி படுகொலை உள்ளிட்ட ஈழத் த மிழர்கள் மீதான இனவழிப்புச் செயற்பாடுகளு க்கு பன்னாட்டு நீதிகோரி தாயகச் செயலணி யின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் 17.08.2026 அன்று மேற்கொள்ளப்பட்ட நீதியின் ஓலம் – 02' இறுதி நாள் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கே ற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடா ளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித் துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கை யில்,

செம்மணி படுகொலை உள்ளிட்ட ஈழத் தமி ழர்கள்மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட படு



கொலைகளுக்கு பன்னாட்டு நீதி தேவை என்பதை வலியுறுத்தியே சிறார்கள், பெ ண்கள், முதியவர்கள் என பெருந்திரளா னவர்கள் இந்த கொழுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் நீண்டதூரம் இந்த ஆர்ப்பட்டப் பேரணியினை முன்னெடுத் திருக்கின்றனர்.

ஈழத் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட சகல படுகொலைகளுக்குமான சர்வதேச நீதி விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற ஈழத் தமிழர்களின் கோரிக்கையினை தற்போதைய ஆட்சியாளர்களாவது ஏற்று க்கொண்டு, குறித்த படுகொலைகளுக் குரிய சர்வதேச நீதிவிசாரணையை மேற்கொ ள்வதற்கு ஒத்துழைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியே இவ்வாறான ஆர்ப்பா ட்டங்கள் மேற்கொள்ளப்படுகி ன்றன.

கடந்த ஆட்சியாளர்களின் காலத்தில் செம்மணிப் புதைகுழி விவகாரம் மூடி மறைக்கப்பட்ட வரலாறுகளும் உள்ளன. அவ்வாறு செம்மணி புதைகுழி விவகாரத் தினை மூடிமறைத்த இனவாத ஆட்சியா ளர்களும் சர்வதேச விசாரணைக்கு உட்படு

02ம் பக்கம் பார்க்க

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்

அரசாங்கத்தின் நோக்கத்திற்கும் செயலுக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது!

- சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை -

அரசாங்கம் நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்றது. ஆனால் அரசாங்கத்தின் நோக்கத்துக்கும் செயலுக்கும் இடையில் இடைவெளி இருக்கின்றது. வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் தற்போதைய அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களிலிருந்து ஒரு மாறுபட்ட அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதற்கான வாய்ப்பையும் கடப்பாட்டையும் கொண்டிருக்கின்றது என சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப்பிராந்தியப் பணிப்பாளர் ஸ்மிரிதி சிங் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் 30.08.2026 அனறு யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

2023 ஆம் ஆண்டு நான் முதன்முறையாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்ட போது பெரிதும் கவலையடைந்தேன். வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோரின் நீண்டகாலப் போராட்டத்துக்கு இன்னமும் பதில் கிட்டாத போதிலும், போராட்டம் இன்னமும் தொடர்கின்றது.

மாநாடு 'நீதிக்கான நீள்பயணம்' எனும் மகுடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதற்கமைய பாதிக்கப்பட்டவர்கள் தசாப்தகாலமாகப் போராடிவருகின்றனர். 'எமது உறவுகள் எங்கே?', 'அதன் பொறுப்பாளிகள் யார்?' என்பதே அவர்களது கேள்வி. இருப்பினும் இன்னமும் எந்தவொரு அரசாங்கமும் அதற்குப் பதிலளிக்கவில்லை. இது இலங்கையில் பொறுப்புக்கூறலின் ஆழமான தோல்வியைக் காண்பிக்கின்றது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் எங்கே என்ற உண்மையை வெளிப்படுத்தும் அதேவேளை, அதன் பொறுப்பாளிகள் யார் என்பதையும் வெளிப்படுத்தவேண்டும். இவை இரண்டும் இருவேறான விடயங்கள் அல்ல. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உண்மை மற்றும் நீதி ஆகிய இரண்டுக்கும் உரித்துடையவர்களாவர்.

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வில் சுமார் 587 மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டுள்ளன. இவ்விடயத்தில் பொறுப்புக்கூறல் என்பது வெறுமனே மனிதப்புதைகுழி அகழ்வுடன் மாத்திரம் நிறுத்தப்பட்டுவிடக்கூடாது.

அரசாங்கம் நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்றது. ஆனால் அரசாங்கத்தின் நோக்கத்துக்கும் செயலுக்கும் இடையில் இடைவெளி இருக்கின்றது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மீது ஒடுக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன. இவ்விடயத்தில் தற்போதைய அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களிலிருந்து ஒரு மாறுபட்ட அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதற்கான வாய்ப்பையும் கடப்பாட்டையும் கொண்டிருக்கின்றது.



அதேவேளை இவ்விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் வகிபாகம் இன்றியமையாததாகும். அதற்கு சமாந்தரமாக உள்ளகப் பொறிமுறைகளும், குற்றவியல் விசாரணைகளும், நீதிமன்ற செயன்முறைகளும் உரியவாறு முன்னெடுக்கப்பட வேண்டும். நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிசெய்யப்படும் வரை சர்வதேச சமூகம் தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்கவேண்டும் என வலியுறுத்தினார்.

பாதுகாப்பு காரணங்களினால் கிளிநொச்சி ஊடக அமைய காணியை விடுவிக்க முடியாது!

- பாதுகாப்பு அமைச்சு திட்டவட்டம் -

கிளிநொச்சி ஏ9 வீதி காக்கா கடைச் சந்தியில் அமைந்துள்ள கிளிநொச்சி ஊடக அமையத்தின் காணியினையும் கட்டடத்தினையும் விடுவித்து தருமாறு கிளிநொச்சி ஊடக இல்லம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை சில மாதங்களுக்கு முன்னர் எழுதியிருந்தனர்.

இக் கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி செயலகம் பாதுகாப்பு அமைச்சிடம் பதில் கோரியிருந்தது அதற்கவைாக பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதி செயலகத்திறகு வழங்கிய பதிலில் பாதுகாப்பு காரணங்கள் காரணமாக குறித்த காணியையும் கட்டிடத்தையும் விடுவிக்க முடியாது என பாதுகாப்பு அமைச்சு அறிக்கையளித்துள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி நிர்வாகம்)டபிள்யூ.எம்.எஸ்.பி. வீரசிங்க கிளிநொச்சி ஊடக அமையத்திற்கு தெரிவித்துள்ளார்.

2009 இற்கு முன்னர் கிளிநொச்சி ஊடக இல்லமாக செயற்பட்ட குறித்த காணியும் கட்டத்தையும் தற்போது இராணுவத்தினர் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த காணிக்கு ஒரு பறமாகவுள்ள நிலம் கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு விடுவிக்கப்பட்ட நிலையில் மறுபுறம் யோகர் சுவாமிகள் நிலையத்திறகும் விடுவிக்கப்பட்ட நிலையில் ஊடக அமையத்தின் காணியும் கட்டடமும் மாத்திரமே விடுவிக்கப்படாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.




ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

File Number :- PS/DA/SAD/MOD/03/01 (Vol. XI)
Date :- /08/2026

President
Kilnochchi Media Forum
Kilinochchi

Regarding the release of the land belonging to the Kilinochchi Press Club

With reference to the above matter, an information report was obtained from the Ministry of Defence regarding the points mentioned in the letter you addressed to His Excellency the President.

02. Accordingly, I kindly inform you that the Ministry of Defence has reported that due to the security reasons it is not possible to release the said land and building.

W.M.S.P. Weerasinghe
Senior Assistant Secretary to the President
(Development Administration)
for Secretary to the President

Telephone : +94114354354 - 3562
Email address : *sas2.dcd@presidentsoffice.lk*

சாப்பிட மட்டும் வாய் திறக்கும்....

(01ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையும், அரசாங்க அதிகார மையத்தின் பக்கத்தில் கூட இவர்கள் எவருமே இல்லை என்ற நிதர்சனமும் மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

இதற்குள் நாம் இலங்கையர் என்ற வெற்றுச் சமத்துவக் கோஷம் வேறு எழுப்பப்படுகிறது. அனைவருக்கும் அதிகாரம் இருந்தால் மட்டுமே உண்மையான சமத்துவம் ஏற்படும். இதுவே மறுக்க முடியாத உண்மையாகும். நான் அமைச்சராக இருந்த காலத்தில், அடிக்கடி அமைச்சரவையில் எழுப்பிய கூச்சல், மேசையில் அடித்த அடி, போட்ட சண்டைகள் என்பன இப்போது எனது ஞாபகத்துக்கு வந்து போகின்றன எனத் தெரிவித்தார்.

இராணுவ முகாம்கள், விகாரைகளின்...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

த்தப்படவேண்டும். இது தொடர்பில் ஏற்கனவே நான் பாராளுமன்றிலும் வலியுறுத்தியுள்ளேன்.

அத்தோடு தற்போது வடகிழக்கில் மக்களின் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களிலும் தமிழ்மக்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்கள் எமக்கு எழுகின்றது.

எனவே வடக்கு கிழக்கில் அமைக்கப்பட்டுள்ள இரணுவ முகாம்களிலுள்ள இராணுவத் தினரை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு, குறித்த இராணுவ முகாம்களை அகழ்வாய்வுகளுக்கு உட்படுத்தப்படவேண்டும். இதனை மக்களே எம்மிடம் முறையிட்டுள்ளனர். எனவே இராணுவ முகாம்களை அகழ்வாய்வுகளுக்கு உட்படுத்த வேண்டும்.

தற்போதைய அரசு நீதியானஅரசு எனில், சர்வதேச தலையீட்டுடன் இராணுவ முகாம்களையும் அகழ்வாய்வுகளுக்கு உட்படுத்தி, தமிழ்மக்களின் எலும்புக்கூடுகள் இராணுவ முகாம்களுக்குள் புதைந்து கிடக்கின்றன. என்ற உண்மையை வெளிப்படுத்துங்கள்.

இராணுவத்தினரை அகற்றிவிட்டு இராணுவ முகாம்களை அகழ்வாய்வுகளுக்கு உட்படுத்துவதுடன், எவ்வித நிலத் தொடர்புமில்லாமல் எமது தாயகப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள விகாரைகளையும் அகழ்வாய்வுகளுக்கு உட்படுத்துங்கள். உண்மைகளை வெளிப்படுத்துங்கள்.

தயவு செய்து தமிழர்கள் மீதான படுகொலைகளை மூடி மறைப்பதற்கு இராணுவ முகாம்களையும், பௌத்தவிகாரைகளையும் அரணாக் பயன்படுத்தாதீர்கள். படுகொலைக் குற்றவாளிகளை காப்பாற்றுகின்ற வேலைகளைச் செய்யாதீர்கள்.

எனவே உண்மைகளை வெளிப்படுத்துவதன் ஊடாக படுகொலைக் குற்றவாளிகளுக்கு தண்டனையை வழங்குவதுடன், பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்யுங்கள்.

மேலும் எமக்கான நீதி கிடைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோமெனத் தெரிவித்தார்.

நீதிப்பொறிமுறையின் பொறுப்பாளிகள் நியாயவான்களாக இருப்பின்

நீதிக்கான பயணம் மிக சுருக்கமானது அப்படியானவர்கள் நியமிக்கப்பட வேண்டும்

- யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கருத்து -

வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான சர்வதேச மாநாடு 'நீதிக்கான நீள்பயணம்' எனும் மகுடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும் உண்மையில் நீதிக்கான பயணம் நீண்டதல்ல. ஆனால் அந்த நீதிக்கான பயணச் செயன்முறைக்குப் பொறுப்பானவர்கள் நியாயமானவர்களாகவும், இதயசுத்தியுடன் இயங்குபவர்களாகவும் இருக்கவேண்டும். அவ்வாறிருப்பின் நீதிக்கான பயணம் மிகச்சுருக்கமானதேயாகும் என யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் சுட்டிக்காட்டினார்.

வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் 30.08.2026 அன்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு ஆசியுரை ஆற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

இதுவரை எமது நாடு பல இயற்கைப் பேரழிவுகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றது. ஆனால் இந்த வலிந்து காணாமலாக்கப்படல்கள் என்பது மனிதனால் நிகழ்த்தப்பட்ட மிகக்கொடூரமான பேரவலமாகும். வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினம் என்பதை ப்போன்றே மிகக்கொடூரமான மனிதர்களின் தினம் என்றும் அடையாளப்படுத்தமுடியும்.

இம்மாநாடு 'நீதிக்கான நீள்பயணம்' எனும் மகுடத் தில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும் உண்மையி ல் நீதிக்கான பயணம் நீண்டதல்ல. ஆனால் அந்த நீதிக்கான பயணச் செயன்முறைக்குப் பொறுப்பானவர்கள் நியாயமானவர்களாகவும், இதயசுத்தியுடன் இயங்குபவர்களாகவும் இருக்கவேண்டும். அவ்வாறிருப்பின் நீதிக்கான பயணம் மிகச்சுருக்கமானதேயாகும்.

எனவே வலிந்து காணாமலாக்கப்படல்கள் விவகாரத்தில் நீதியை நிலைநாட்டவேண்டிய பொறுப்புக்கு நியாயமாகச் செயற்படக்கூடியவர்கள் நியமிக்கப்படவேண்டும் என்றார்.

அதேவேளை இம்மாநாட்டில் ஆசியுரை ஆற்றிய வேலன் சுவாமிகள், உலகளாவிய ரீதியில் அதிக எண்ணிக்கையானோர் வலிந்து காணாமலாக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருப்பதாகவும், வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரிப் போராடியவர்களில் இதுவரை 300 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் தற்போது எலும்புகள் சாட்சியங்களாக மாறியிருக்கும் சூழ்நிலையில், மனிதப்புதைகுழி அகழ்வு, பராமரிப்பு, விசாரணை மற்றும் நீதியை நிலைநாட்டல் உள்ளிட்ட சகல செயன்முறைகளிலும் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பு மற்றும் பங்கேற்பு அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

யாழில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்தில் பொலிஸார் அடாவடி!

ஓ.எம்.பி.யின் ஏமாற்று நாடகம் இனியும் வேண்டாம். இராணுவத்தினரின் கையில் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என கோரி வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் போராட்டம் நடத்தப்பட்டது.

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஏற்பாட்டில் 25.08.2026 அன்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற காணாமல் போனோருக்கான சர்வதேச தின நிகழ்வை கண்டித்து வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக போராட்டம் நடத்தப்பட்டது.

உள்நாட்டு பொறிமுறையை வலுப்படுத்தும் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் இழப்பீடும் வேண்டாம், மரண சான்றிதழும் வேண்டாம் என்பதை வலியுறுத்தியே போராட்டம் நடைபெற்றது.

இப்போராட்டத்தில் பங்கேற்றவர்களை பொலிஸார் தங்களது பலத்தை பிரயோகித்து அடாவடியாக அத்துமீறி அங்கிருந்து இழுத்துச் சென்று வெளியேற்றியமையும் குறிப்பிடத்தக்கது.





செம்மணி புதைகுழி தொடர்பான

சுயாதீன விசாரணைகளுக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும்

அவுஸ்திரேலியா செனட்சபை உறுப்பினர் வலியுறுத்து



செம்மணி மனிதப் புதைகுழி குறித்து சுயாதீன விசாரணைகள் நடாத்தப்படுவதை உறுதி செய்வதை இலக்காகக்கொண்டு இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதுடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இவ்விவகாரம் குறித்து அழுத்தம் பிரயோகிக்கவேண்டும் என அவுஸ்திரேலிய செனெட் சபை உறுப்பினர் டேவிட் /பிரிட்ஜ் அந்நாட்டு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் அண்மையில் ஆற்றிய உரையில், 'இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதற்கு ஆதரவளிப்பதாக அவுஸ்திரேலியா உறுதியளித்திருந்த நிலையில், அதனை நடைமுறைப்படுத்தவேண்டிய தருணம் இதுவாகும்' என டேவிட் /பிரிட்ஜ் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது நாடாளுமன்ற உரையின்போது செனெட் சபை உறுப்பினர் டேவிட் /பிரிட்ஜ் மேலும் கூறியதாவது:

தற்போது இலங்கையில் யாழ், செம்மணியில் தடயவியல் அகழ்வாய்வு ஒன்று இடம்பெற்றுவருகிறது. இந்த அகழ்வில் 544 க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

சில மனித எலும்புக்கூடுகளின் அளவை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில், அவை குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்குச் சொந்தமானவையாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தமட்டில் இது புதியதொரு கதை அல்ல.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தரவுகளின் பிரகாரம், இலங்கையில் நாடளாவிய ரீதியில் சுமார் 20 மனிதப்புதைகுழிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் அவற்றில் குறை ந்தபட்சம் ஒரு மனிதப்புதைகுழி தொடர்பில் கூட முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை.

சர்வதேச மன்னிப்புச்சபை 1998 ஆம் ஆண்டு முதற்தடவையாக சர்வதேச ஆதரவுடனான ஒரு சுயாதீன அகழ்வு மற்றும் விசாரணை செயன்முறைக்கு அழைத்து விடுத்ததிலிருந்து செம்மணி மனிதப்புதைகுழி பற்றிய தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

அண்மையில் இம்மனிதப்புதைகுழியை நேரடியாகப் பார்வையிட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் தடயவியல் நிபுணர்களின் பங்கேற்புடன் சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தினார்.

இலங்கையில் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் அவுஸ்திரேலியா உறுதியளித்தது.

அதனை இப்போது நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கமைய செம்மணி மனிதப்புதைகுழி தளத்தைப் பாதுகாத்தல், அங்கு கண்டறியப்பட்ட மனித எச்சங்களை முறையாகப் பாதுகாத்தல் மற்றும் இது குறித்த சுயாதீன விசாரணைகளையும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதையும் இலக்காகக்கொண்டு இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றல் என்பவற்றுக்கான நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என வலியுறுத்தினார்.

கிளிநொச்சியில் விபத்து

17 வயது யுவதி உயிரிழப்பு

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் உள்ள புகையிரதக் கடவையில் இடம்பெற்ற விபத்தில் 17 வயது யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புகையிரத கடவையை கார் கடக்க முயன்ற போது புகையிரதம் காருடன் மோதியதில் காரில் பயணித்தவர்களில் யுவதி சம்பவ இடத்திலையே உயிரிழந்த நிலையில், மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் , வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் . இதேவேளை, குறித்த புகையிரதக் கடவையில் கடந்த சில நாட்களாக சமிக்ஞை விளக்குகள் மற்றும் எச்சரிக்கை அமைப்புகள் முறையாக இயங்கவில்லை என அப்பகுதி பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்திலும் குறித்த புகையிரதக் கடவையின் சமிக்ஞை முறையாக இயங்கவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.



செம்மணி புதைகுழி விவகாரத்தில் அரசு வெளிப்படையாக செயற்பட வேண்டும்

- பாராளுமன்றத்தில் வலியுறுத்திய ஸ்ரீதரன் எம்.பி -

செம்மணி மனிதபுதைகுழி விவகாரத்தில் அரசாங்கம் இதயச்சுத்தியுடன் வெளிப்படையாக செயற்பட வேண்டும். இருப்பினும் அரசாங்கம் மந்தகரமாகவே செயற்படுகிறது. செம்மணி மனித புதைகுழியின் மதிலை தாண்டிய பகுதிகளிலும் மனித எலும்புக்கூடுகள் இருப்பதற்கான சாத்தியம் காணப்படுகிறது.நீதிமன்ற உத்தரவுடன் சோமரத்ன ராஜபக்ஷவை செம்மணிக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அங்கு அவர் காண்பிக்கும் இடங்களில் அகழ்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் பல விடயங்கள் வெளிவரும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் 21.08.2026 அன்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைக்குழி அவலங்கள் மற்றும் செம்மணி மனிதப்புதைக்குழி அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் உயரிய சபையில் விடயங்களை முன்வைக்கும் பொறுப்பு எமக்கு காணப்படுகிறது. இதுவரைகாலமும் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகள் ஊடாக 584 மனித எழும்புக்கூடுகள் கண்ணெடுக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்ந்து பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுமா ,இல்லையா என்பதை அரசாங்கம் இதுவரையில் வெளிப்படையாக அறிவிக்கவில்லை. அறிவிப்புக்களும் இழுபறி நிலையில் காணப்படுகிறது. இலங்கை மனித உரிமை ஆணைக்குழு 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பகுதியில் அகழ்வு பணிகளை முன்னெடுத்தது. இருப்பினும் உண்மைகள் வெளிப்படுத்தப்படவில்லை.

முன்னாள் அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா தலைமையில் கமிலஸ் பெர்னாண்டோ, ஜெசீமா இஸ்மாயில், எம்.சி.எம். இக்பால் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்த குழு 1995 மற்றும் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மண்ணில் ஆய்வு பணிகளை மேற்கொண்டது. இந்த குழு காணாமல் போன 281 பேரின் விபரங்களுடன், செம்மணியின் விடயங்களையும் வெளிப்படுத்தியது.இந்த குழுவின் அறிக்கை கிடப்பில் போடப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைக்குழி அகழ்வில் இருந்து இதுவரையில் 584 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், 57 எழும்புக்கூடுகள் கூட்டாக மீட்கப்பட்டுள்ளன. சுமார் 600 பேர் வரையில் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்ற நிலையில் இதுவரையில் அவை வெளியில் கொண்டு வரப்படவில்லை. காரணங்களும் வெளிப்படுத்தப்படவில்லை.

நீதிமன்ற உத்தரவுடன் மேற்கொள்ளப்பட்ட 3 ஆம் கட்ட ஆய்வுப்பணிகள் கடந்த 19 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்துள்ளன. தடயவியல் தொடர்பில் எதிர்வரும் மாதாம் 30 ஆம் திகதி அறிக்கை தருமாறு பேராசிரியர் ராஜ்சோம தேவாவிடம் கோரப்பட்டுள்ளது. அதேபோல் இந்த வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

செம்மணி மனிதப்புதைகுழி முதற்கட்டமாக 09 நாட்களும், இரண்டாம் கட்டமாக 45 நாட்களும், மூன்றாம் கட்டமாக 56 நாட்களும் என்ற அடிப்படையில் 110 நாட்களாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 584 மனித எலும்புக்கூடுகளும், 170 பிற சான்று பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப்புதைகுழி பகுதிக்கு செல்வதற்கு ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவுக்கு அரசாங்கம் அனுமதியளித்தது. ஆனால் கனடா உயர்ஸ்தானிகருக்கும், அவரது குழுவினருக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியா நாட்டுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. சர்வதேச இராஜதந்திரிகளுக்கு ஏன் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இது பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

செம்மணியை அண்மித்த பகுதியிலும் ஆட்கள் அடித்து கொலை செய்யப்பட்டு, புதைக்கப்பட்டுள்ளார்கள் என்று மரண தண்டனை கைதியான சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.சோமரத்ன ராஜபக்ஷவை செம்மணிக்கு அழைத்துச் சென்று அவரிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் இதுவரையில் முன்னெடுக்கவில்லை. அரசாங்கம் இந்த விடயத்தில் பின்வாங்குகிறது.

செம்மணியில் மனித பேரவலம் நடந்துள்ளது. பலர் அடித்து கொல்லப்பட்டுள்ளார்கள். கூட்டாக புதைக்கப்பட்டுள்ளார்கள். சிறுவர்களின் எலும்புகூடுகளும்மீட்கப்பட்டுள்ளன. இவர்கள்12 வயதுக்குட்பட்டவர்கள் என்று அறியப்படுகிறது. இவர்கள் என்ன செய்தார்கள். ஆயுதம் ஏந்திப் போராடினார்களா, ஏன் அவர்கள் மோசமாக அடித்துக் கொள்ளப்பட்டார்கள்.

கொக்கிளாய், மன்னார் - சதொச , மன்னார் - திருக்கேதீச்சரம், கிளிநொச்சி - கணேசபுரம் ஆகிய பகுதிகளில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. ஆனால் இன்றும் அவை முறையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கொக்கிளாய் பகுதியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் பெரும்பாலானவை வாய் பிளந்த வண்ணம் அடையளப்படுத்தப்பட்டன. ஒன்று அவர்கள் உயிருடன் புதைக்கப்பட்டிருக்க வேண்டும், அல்லது குற்றுயிருடன் புதைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏன் இந்த அகழ்வு பணிகளுக்கு நிதி ஒதுக்கவில்லை.

செம்மணி மனித புதைக்குழியின் அகழ்வுப் பணிகள் 110 நாட்களுடன் நிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டிய அவசியம் காணப்பட்டால் அரசாங்கம் நீதிமன்ற உத்தரவுடன் நிதி ஒதுக்க வேண்டும். அரசாங்கத்திடம் நிதி இல்லையாயின் இந்தியா, அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகளுடன கலந்துரையாடி அரசாங்கம் நிதி கோர வேண்டும்.தென்னாபிரிப்பா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பை பெற்று, பணிகளை தொடர்ந்து அரசாங்கம் உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.

செம்மணி மனிதபுதை குழி விவகாரத்தில் அரசாங்கம் இதயச்சுத்தியுடன் வெளிப்படையாக செயற்பட வேண்டும். அரசாங்கம் மந்தகரமாகவே செயற்படுகிறது. செம்மணி மனித புதைகுழியின் மதிலை தாண்டிய பகுதிகளிலும் மனித எலும்புக்கூடுகள் இருப்பதற்கான சாத்தியம் காணப்படுகிறது.நீதிமன்ற உத்தரவுடன் சோமரத்ன ராஜபக்ஷவை செம்மணிக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அங்கு அவர் காண்பிக்கும் இடங்களில் அகழ்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.உண்மையை வெளிக்கொண்டு வர அரசாங்கம் நீதியுடன் அணுக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார்.



12 வயது பேத்தியை துஸ்பிரயோகம் செய்த 81 வயது தாத்தாவிற்கு 15 வருடம் சிறை

- வவுனியா மேல் நீதிமன்றம் முக்கிய தீர்ப்பு -

12 வயதுடைய சொந்த பேத்தியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 81 வயதுடைய முதியவருக்கு 15 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா அவர்கள் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், போகஸ்வெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெஹரதென்ன பகுதியில் இக்குற்றச்செயல் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் நடந்த போது எதிரிக்கு 76 வயதாகும். இது தொடர்பான வழக்கின் குற்றச்சாட்டுப் பத்திரம் 2024 ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இவ்வழக்கு விசாரணையின் போது, எதிரி தரப்பில் அவரது 81 வயது முதுமையைக் கருத்தில் கொண்டு கருணை காட்டுமாறு விண்ணப்பிக்கப்பட்டது.

எனினும், பாதிக்கப்பட்ட சிறுமியின் இயற்கை பாதுகாவலர்களில் ஒருவரான பாட்டனாலேயே இக்குற்றச்செயல் புரியப்பட்டுள்ளமை, சிறுமிக்கு ஏற்பட்ட கடுமையான உளவியல் பாதிப்புகள் மற்றும் கல்வி தடைப்பட்டிருந்தமை ஆகியவற்றை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதால், எதிரியின் வயதைப் புறக்கணித்து 15 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் 50,000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டதுடன் அதனை செலுத்தத் தவறின் மேலதிக 1 வருடம் சிறைத்தண்டனையும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 1,000,000 ரூபா (ஒரு மில்லியன் ரூபாய்) நஷ்ட ஈடும் செலுத்த வேண்டும் எனவும் அதனை செலுத்தத் தவறின் மேலதிக 2 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.



அரச சட்டவாதியினால் முன்வைக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதை அடுத்து இத்தீர்ப்பு வழங்கப்பட்டதுடன் இவ்வழக்கினை சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் அரச சட்டவாதி ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீ நெறிப்படுத்தியிருந்தார்.

17.08.1985 வரோதயநகர் படுகொலை

இலங்கையின் தமிழர்களுக்கெதிரான இனப்படுகொலை வரலாற்றில் வரலாற்றில் 1985ஆம் ஆண்டு திருகோணமலைக்கு ஒரு இரத்தம் தோய்ந்த காலமாக அமைந்தது. தமிழர் வாழ்ந்த பல கிராமங்கள் ஸ்ரீலங்கா அரச படைகள் மற்றும் சிங்கள காடையர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகின. மக்கள் கொல்லப்பட்டனர் வீடுகள் அழிக்கப்பட்டன் ஆயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் வாழிடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அந்தக் காலகட்டத்தில் இடம்பெற்றதாகப் பதிவாகியுள்ள கொடூரச் சம்பவங்களில் ஒன்றாகவே 1985 ஆகஸ்ட் 17ஆம் திகதி வரோதயநகரில் இடம்பெற்ற படுகொலை நினைவுகூரப்படுகிறது.

அந்தக் காலை...

1985 ஆகஸ்ட் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை....

வரோதயநகரின் வழக்கமான அமைதியான வாழ்க்கை அன்றைய காலையில் திடீரென அச்சமாக மாறியது. கன்னியா பகுதியிலிருந்து ஆயுதம் தாங்கிய குழுவினர் டிபென்டர் ரக வாகனத்தில் வரோதயநகர் பகுதிக்குள் நுழைந்து வீதிகளில் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் அச்சமடைந்த தமிழ் மக்கள் பாதுகாப்பிற்காக தங்கள் வீடுகளிலும் அயல் வீடுகளிலும் ஒளிந்து கொண்டனர்.

வீடுகளின் கதவுகளுக்குப் பின்னால் மறைந்திருந்த அந்த மக்கள் தங்களுக்கு பாதுகாப்பு கிடைத்துவிட்டதாக நினைத்திருக்கலாம். அடுத்த சில நிமிடங்களில் அந்த வீடுகளே மரணத்தின் இடங்களாக மாறின.

முதல் உயிர்ப்பலி

வரோதயநகர் பாதாள வைரவர் ஆலயத்திற்கு அருகிலிருந்த ஒரு வீட்டின் கதவு தட்டப்பட்டது.

கதவைத் திறந்த வெள்ளையன் திருச்செல்வம் முதலில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைத் தொடர்ந்து அவரது மாமனாரான கந்தன் மாணிக்கமும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதன் பின்னர் கந்தையா வீதிக்குச் சென்ற ஆயுதம் தாங்கியவர்கள் அங்கு சீனியன் மாணிக்கத்தையும் சுட்டுக் கொன்றனர்.

மூன்று உயிர்கள் சில நிமிடங்களுக்குள் பறிக்கப்பட்டன. ஆனால் அவர்களின் கொலைப்பசி அங்கேயே நிற்கவில்லை.

ஒரு வீட்டுக்குள் பதுங்கிய மக்கள்

துப்பாக்கிச் சத்தத்திலிருந்து தப்புவதற்காக அப்பகுதி மக்கள் தம்பிராசா என்பவரின் வீட்டில் பதுங்கியிருந்தனர். அந்த வீட்டுக்குள் பெண்களும் குழந்தைகளும் உட்பட பலர் இருந்தனர்.

குழந்தைகளின் அழுகுரல் சத்தங்கள் கேட்டதை அடுத்து ஆயுதம் தாங்கியவர்கள் மீண்டும் அந்த வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டி உள்ளே பார்த்தபோது, அங்கு மக்கள் இருப்பதை அவதானித்த பின்னர் வீட்டுக்குள் கைக்குண்டு வீசப்பட்டது. அதனால் பலர் காயமடைந்தனர்.

காயங்களுடன் வீட்டிலிருந்து வெளியே ஓடியவர்களும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியானார்கள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட ஏழு பேர் அங்கு கொல்லப்பட்டனர்.

11 உயிர்கள்

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டதாகக் குறிப்பிடப்படும் 11 பேரின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

01. குணராசா வசிகலா
02. குணராசா சங்கர்
03. குணராசா கெங்கா
04. தேசிங்கன் இன்பன்
05. தேசிங்கன் ஜெயந்தி
06. இராசரெட்ணம் ரபேந்திரராசா
07. கதிர்காமு நாகேஸ்வரி
08. வெள்ளையன் திருச்செல்வம்
09. கந்தன் மாணிக்கம்
10. சீனியன் மாணிக்கம்
11. பிச்சாண்டி கணேசரத்தினம்

மருத்துவமனையிலும் முடிவடையாத துயரம்

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் அப்பகுதி மக்கள் மாலை நேரத்தில் திருகோணமலை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர். ஆனால் அங்கே மற்றொரு துயரம் காத்திருந்தது.

காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கதிர்காமு என்பவரின் எட்டு வயது மகள் காணாமலாக்கப்பட்டார். அந்தக் குழந்தைக்கு பின்னர் என்ன நடந்தது என்பது தொடர்பாக இதுவரை தகவல் கிடைக்கவில்லை.

41ம் ஆண்டு நினைவேந்தல்

இப் படுகொலையின் 41ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு உயிரிழந்த உறவுகளின் குடும்பத்தினரால் வரோதயநகர் பிரதான வீதியில், படுகொலை இடம்பெற்ற வீடுகளுக்கு அருகே 17.08.2026 அன்று நடைபெற்றது.

17.08.1985 அன்று படுகொலை செய்யப்பட்ட 11 பேர் உள்ளிட்ட அதனை அண்மித்த காலங்களில் குறித்த பகுதியில் படுகொலை செய்யப்பட்ட அனைவரையும் நினைவுகூர்ந்து அவர்களின் ஆத்மசாந்தி வேண்டி மலர் தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

படுகொலை இடம்பெற்று 41ஆண்டுகளாகியும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு எவ்வித நீதியும் கிடைக்கவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.









தமிழ் முஸ்லீம்கள் மோதிக்கொள்வதையே ஒரு தரப்பு விரும்புகின்றது

- பாராளுமன்றத்தில் சாணக்கியன் குற்றச்சாட்டு -

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக முஸ்லிம் மக்கள் பேச வேண்டும், முஸ்லிம் மக்களுக்கு எதிராக தமிழ் மக்கள் பேச வேண்டும். இரண்டு இனத்தவர்களும் அடித்துக் கொள்ள வேண்டும். அதனூடாக தாம் அரசியல் இலாபம் தேட வேண்டும் என்பது ஒரு தரப்பின் எண்ணமாகும். தற்போதைய பிரச்சினையை கொண்டு ஒரு தரப்பு குளிர்காய்வது வெளிப்படையாக தெரிகிறது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் குறிப்பிட்டார்.

முஸ்லிம் சகோதரிகள் அவர்களின் கலாசார அம்சங்களுடன் பணிகளில் ஈடுபடும் வகையில் அரசாங்கம் சுற்றுநிரூபத்தை வெளியிட்டால் பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். அதனை விடுத்து விட்டு கல்முனை வைத்தியசாலையை மாத்திரம் இலக்குப்படுத்தி அந்த மக்களையும், அதிகாரிகளையும், இனவாதத்துடன் குற்றஞ்சாட்டும் ஒருசில அரசியல்வாதிகளின் மிகவும் கேவலமான செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கிறேன். இந்த பிரச்சினைக்கு அரசாங்கம் முரண்பாடற்ற வகையில் தீர்வை வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் 20.08.2026 அன்று நடைபெற்ற பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு புதிதாக நியமனம் பெற்ற முஸ்லிம் சகோதார சுகாதார சேவையாளர்களின் சீருடை தொடர்பான பிரச்சினை தற்போது பேசப்படுகிறது. பலர் பல விடயங்களை குறிப்பிடுகிறார்கள்.அனைவரும் இதன் பின்னணியை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் ஒன்றியம் இந்த விடயம் பற்றி பேச வேண்டும் என்று சுகாதார அமைச்சர் தனது உரையில் குறிப்பிடுகிறார். இந்த சம்பவத்துடன் தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் கூட்டிணைவு பறக்கப் போகிறது என்று அரசியல்வாதி ஒருவர் குறிப்பிடுகிறார்.

தமிழ் பேசும் ஆறு அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதை விரும்பாத இரண்டு தரப்பினர்கள் இங்கு

உள்ளார்கள். ஒன்று அரசாங்க தரப்பு, தமிழ் பேசும் பிரதான 06 அரசியல் கட்சிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் எதிர்காலத்தில் அது தமக்கு சவாலாக அமையும் என்பதை அரசாங்கம் நன்றாக அமையும். இன்னொன்று, இனவாதத்தை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்படும் தரப்பு .

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக முஸ்லிம் மக்கள் பேச வேண்டும், முஸ்லிம் மக்களுக்கு எதிராக தமிழ் மக்கள் பேச வேண்டும். இரண்டு இனத்தவர்களும் அடித்துக் கொள்ள வேண்டும்.அதனூடாக தாம் அரசியல் இலாபம் தேட வேண்டும் என்பது இந்த இரண்டாவது தரப்பின் எண்ணமாகும். இந்த இரண்டு தரப்பும் தற்போதைய பிரச்சினையை கொண்டு குளிர்காய்வது வெளிப்படையாக தெரிகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியானது இந்த விடயம் தொடர்பில் தனது நிலைப்பாட்டை அறிக்கை ஊடாக உத்தியோகபூர்வமாக விரைவில் அறிவிக்கும். இந்த சீருடை பிரச்சினையில் தமிழ் மக்களையும், தமிழ் அதிகாரிகளையும் தொடர்புப்படுத்தியிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது எனது நிலைப்பாடாகும்.

இந்த சீருடை தொடர்பான சுற்றுநிரூபத்தை அரசாங்கமே வெளியிட்டது.முஸ்லிம் சமூகத்தினர் கலாசார ஆடையுடன் சேவைக்கு வருகைத்தரும் வகையில் சுற்றுநிருபத்தை திருத்தம் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்திடமே குறிப்பிட வேண்டும்.

அதனை விடுத்து சுற்றுநிரூபத்தை திருத்தம் செய்யாமல், தமிழ் பேசும் மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் இனவாத கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள். இவர்கள் தான் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கும், கொவிட் காலத்தில் முஸ்லிம் மக்களின் ஜனாசாக்களை தகனம் செய்யும் தீர்மானத்துக்கும் ஆதரவளித்தார்கள். அப்போதைய ஆட்சியாளர்களின் காலில் விழுந்துக் கிடந்தார்கள்.

சுற்றுநிருபம் பற்றி அரசாங்கத்துடன் பேசுவதற்கு தற்றுணிபு இல்லாமல் இன்று இவர்கள் தமிழ் மக்கள் மீது குற்றஞ்சாட்டுகிறார்கள். இனவாதவமாக பேசுகிறார்கள். இது முற்றிலும் தவறானது. முஸ்லிம் மக்கள் அவர்களின் கலாசார ஆடையுடன் சேவையில் ஈடுபடுவது அவர்களின் சுதந்திரமாகும். திருத்தங்களை முன்னெடுப்பதை விட்டு விட்டு வைத்தியர் சுகுணன் மொசாட் அமைப்புடன் தொடர்புப்பட்டவர் என்று அவர் மீது குற்றஞ்சாட்டுவது முறையற்றது, கடந்த அரசாங்கங்களில் சுகாதார அமைச்சில் பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் பதவிகளை வகித்தவர்கள் ஏன் இந்த சுற்றுநிரூபம் பற்றி பேசவில்லை.

ஆறு தமிழ் பேசும் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படும் போது பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன. பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்வு காண்பதற்காகவே முயற்சிக்கிறோம். கடந்த காலங்களில் இடம்பெற்ற பல விடயங்கள் பற்றி பேசிக் கொண்டிருந்தால் தீர்க்கப்பட வேண்டிய பல அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வுக் காண முடியாத நிலை ஏற்படும்.

.முஸ்லிம் சகோதரிகள் அவர்களின் கலாசார அம்சங்களுடன் பணிகளில் ஈடுபடும் வகையில் அரசாங்கம் சுற்றுநிரூபத்தை வெளியிட்டால் பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். அதனை விடுத்து விட்டு கல்முனை வைத்தியசாலையை மாத்திரம் இலக்குப்படுத்தி அந்த மக்களையும், அதிகாரிகளையும், இனவாதத்துடன் குற்றஞ்சாட்டும் ஒருசில அரசியல்வாதிகளின் மிகவும் கேவலமான செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கிறேன். இந்த பிரச்சினைக்கு அரசாங்கம் முரண்பாடற்ற வகையில் தீர்வை வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என்றார்.



செம்மணி புதைகுழி குறித்த விசாரணைக்கு

கனடாவும், சர்வதேசமும் ஆதரவளிக்க வேண்டும்!

- கனடா எம்.பி விஜய் தணிகாசலம் வலியுறுத்தல் -

இனப்படுகொலையைப் புரிந்தவர்களே அவர்கள் இழைத்த குற்றங்களை விசாரணை செய்யமுடியாது. எனவே செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் சான்றுகளைச் சேகரிப்பதற்கும், மரபணு மாதிரிகள் மூலம் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கும் ஏதுவான ஒரு சுயாதீன சர்வதேச விசாரணைக்கு கனடாவும் சர்வதேச சமூகமும் ஆதரவளிக்கவேண்டும் என ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து விஜய் தணிகாசலம் அவரது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் மேலும் கூறியிருப்பதாவது:

செம்மணி மனிதப்புதைகுழியில் தொடர்ந்து கண்டறியப்படும் மனித எச்சங்கள் மற்றும் இலங்கை அரசினால் படுகொலை செய்யப்பட்டவர்களின் கதைகள் குறித்து நான் மிகுந்த அதிர்ச்சியடைகிறேன். தற்போதுவரை குழந்தைகள்மற்றும்சிறுவர்களதுஎலும்புக்கூடுகள் உள்ளடங்கலாக சுமார் 570 க்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

செம்மணி என்பது தனித்தவொரு மீறல் சம்பவம் அல்ல. மாறாக இது தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வலிந்து காணாமலாக்கப்படல்கள், சட்டவிரோத படுகொலைகள் மற்றும் இனவழிப்பு என்பவற்றுக்கான பரந்துபட்ட சான்றாகும்.

இனப்படுகொலையில் இருந்து தப்பிய தமிழர்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் உள்ளடங்கலாக எனது தொகுதியில் வாழும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவொரு கடந்தகாலத் துயரம் அல்ல. பெரும்பாலானோர் தமது காணாமல்போன அன்புக்குரியவர்கள் பற்றிய துயரத்தையும், இன்னமும் விடை கிடைக்காத கேள்விகளையும் சுமந்துகொண்டே கனடாவுக்கு வந்தனர்.

இந்நிலையில் தற்போது செம்மணி மனிதப்புதைகுழியில் அகழ்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு மனித எச்சமும் அந்த வடுக்களை மீண்டும் நினைவூட்டுவதுடன் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றுக்கான கோரிக்கையையும் வலுப்படுத்துகின்றது.

இனப்படுகொலையைப் புரிந்தவர்களே அவர்கள் இழைத்த குற்றங்களை விசாரணை செய்யமுடியாது. மாறாக சான்றுகளைச் சேகரிப்பதற்கும், மரபணு மாதிரிகள் மூலம் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கும், இச்செயன்முறைகள்தடயவியல்நிபுணர்கள் ஊடாகக் கண்காணிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கும் ஏதுவான ஒரு சுயாதீன சர்வதேச விசாரணைக்கு கனடாவும் சர்வதேச சமூகமும் ஆதரவளிக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இலவசக் கல்வியை கைவிட்டு தனியார் கல்வியை ஊக்குவிக்கும் அரசு!

- ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு -

கடந்த காலத்தில் இலவசக் கல்வியைப் பாதுகாப்பதாகக் கூறிப் போராடிய மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தற்போது ஆட்சிக்கு வந்த பின்னர் முழுமையாகத் தனியார் கல்வியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளையே முன்னெடுத்து வருகின்றது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சாட்டினார்.



கொழும்பில் அமைந்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் காரியாலயத்தில் சனிக்கிழமை (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப்பீடமேறுவதற்கு முன்னர், அதன் பிரதான அங்கமான மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் இலவசக் கல்வியை வலியுறுத்தியும் தனியார் கல்வியை எதிர்த்தும் வீதியில் இறங்கிப் போராடினர். ஆனால், ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் அவர்கள் அதற்கு முற்றிலும் மாறான நடவடிக்கைகளையே முன்னெடுத்து வருகின்றனர்.

நாட்டில் உள்ள 17 அரச பல்கலைக்கழகங்களின் இடவசதிப் பற்றாக்குறை காரணமாக உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் 1,70,000 மாணவர்களில் 40,000 முதல் 45,000 மாணவர்கள் மட்டுமே ஆண்டுதோறும் அரச பல்கலைக்கழகங்களுக்குள் உள்வாங்குவதற்குத் தகுதி பெறுகின்றனர். எஞ்சிய ஆயிரக்கணக்கான தகுதிவாய்ந்த மாணவர்களுக்கான பல்கலைக்கழகப் பிரவேசம் தொடர்பில் கடுமையான சிக்கல்கள் நிலவுவதாகப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் சங்கங்களின் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது. இருப்பினும், அரச பல்கலைக்கழகக் கட்டமைப்பை விரிவுபடுத்துவதை விடுத்து, 2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலுள்ள வட்டி இல்லாத கடன் திட்டத்தின் மூலம் அரச சார்பற்ற மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் 129 பாடநெறிகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதை அரசாங்கம் தீவிரமாக ஊக்குவித்து வருகின்றது.

மேலும், அரச சார்பற்ற 16 பாடநெறிகளுக்குத் திடீர் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், 2026.06.16 ஆம் திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தனியார் பல்கலைக்கழகமொன்றிற்கு வணிக நிர்வாகவியல் சிறப்புப் பட்டத்தை வழங்குவதற்கான அனுமதியை கல்வி அமைச்சர் ஹரினி அமரசூரிய கையொப்பமிட்டு வழங்கியுள்ளார்.

இதுமட்டுமன்றி, தனியார் பல்கலைக்கழகங்களில் கற்போருக்கு அரச பாடசாலைகளில் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு விசாக்கா வித்யாலயம் உள்ளிட்ட முன்னணிப் பாடசாலைகளுக்கும், புத்தளம் வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளுக்கும் தனியார் கல்லூரி மாணவர்களைப் பயிற்சிக்காக ஏற்றுக்கொள்ளுமாறு உத்தியோகபூர்வக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதேநேரம், அரச பல்கலைக்கழகங்களில் 4 வருட கல்வியியல் பட்டத்தைப் பூர்த்தி செய்த பட்டதாரிகள் ஆசிரியர் சேவையின் தரம் 2-2 இன் கீழ் பணி நியமனமின்றி வீடுகளில் முடங்கிக் கிடக்கும் நிலையில், 6 முதல் 10 மாதங்கள் வரை இணையவழியில் பயின்ற தனியார் பட்டதாரிகளுடன் அவர்களை இணைத்து நியமனம் வழங்க அரசாங்கம் முயற்சிப்பது பாரிய அநீதியாகும். அத்துடன், 15 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட சிறிய பாடசாலைகளை மூடுவதற்குத் திட்டமிடுவதை விடுத்து, இலவசக் கல்வியை உறுதிப்படுத்தும் கல்விச் சீர்திருத்தங்களை அரசாங்கம் உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்றார்.

யாழில் வீடொன்றின் மீது தாக்குதல் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் அடாவடி

- பொலிஸாரும் உடந்தை என குற்றச்சாட்டு -



யாழ்ப்பாணத்தில் வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைதான தேசிய மக்கள் சக்தியின் வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சந்திரகுமார் கணேசரூபன் தனது உள்ளூராட்சி சபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

நெல்லியடி பகுதியில் உள்ள ஓய்வுபெற்ற அரச உத்தியோகஸ்தர் ஒருவரின் வீட்டின் மீது கல்லெறிந்து தாக்குதல், நடாத்தி, வீட்டு வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்களையும் குறித்த உள்ளூராட்சி உறுப்பினர் தலைமையிலான கும்பல் சேதப்படுத்தி உள்ளது.

இது தொடர்பில் வீட்டார் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்குதொலைபேசிஊடாகஅறிவித்ததை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் கும்பலை மடக்கி பிடித்து கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்று சொற்ப நேரத்தில் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அரசியல்செல்வாக்கினால்தான்அவர்விடுதலை செய்யப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த உறுப்பினர் தனது உள்ளூராட்சி உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

குறித்த உறுப்பினர் தலைமையிலான குழுவினர் கடந்த காலங்களில் யாழில் நடைபெற்ற அபிவிருத்திக்குழு கூட்டங்களை குழப்பியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மனிதாபிமானப் பாதுகாப்பின் வீழ்ச்சியின் அடையாளமாக மாறியிருக்கும் மூதூர் படுகொலை

- சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு -

மூதூர் படுகொலையானது இலங்கையில் மனிதாபிமானப் பாதுகாப்பின் வீழ்ச்சிக்கான அடையாளமாக மாறியிருப்பதாக லீகல் அக்ஷன் வேல்ட்வைட்' அமைப்பின் சட்ட ஆலோசகர் ஹெக்டர் ஷார்ப் மற்றும் 'அக்ஷன் எகெய்ன்ஸ்ட் ஹங்கர்' அமைப்பின் மனிதாபிமான கலந்தாய்வு அதிகாரி லில்லி ஸ்பார்க்ஸ் ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.



இலங்கை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் தீவிரமடைந்திருந்த வேளையில், 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4 ஆம் திகதியன்று 'அக்ஷன் எகெய்ன்ஸ்ட் ஹங்கர்' (பட்டினிக்கு எதிரான இயக்கம்) அமைப்பின் 17 தன்னார்வத் தொண்டுப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் இடம்பெற்று 20 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில், இன்னமும் அதற்குப் பொறுப்பானவர்கள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. இதுகுறித்து 'லீகல் அக்ஷன் வேல்ட்வைட்' அமைப்பின் சட்ட ஆலோசகர் ஹெக்டர் ஷார்ப் மற்றும் 'அக்ஷன் எகெய்ன்ஸ்ட் ஹங்கர்' அமைப்பின் மனிதாபிமான கலந்தாய்வு அதிகாரி லில்லி ஸ்பார்க்ஸ் ஆகியோர் வெளியிட்டுள்ள கட்டுரையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இயற்கைப் பேரிடர்கள் ஏற்படும்போதும், போர்கள் மூளும்போதும், பட்டினி பரவும்போதும் மனிதாபிமானப் பணியாளர்கள் உதவிக்கு வருவார்கள். நிர்க்கதி நிலையிலுள்ள சமூகங்கள் அவர்களது வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவர்கள் கைகொடுப்பார்கள். ஆனால் மக்களுக்கு உதவும் அவர்களே தாக்குதலுக்கு உள்ளானால் என்ன நேரும்?

2006 ஆம் ஆண்டு 'அக்ஷன் எகெய்ன்ஸ்ட் ஹங்கர்' (பட்டினிக்கு எதிரான இயக்கம்) அமைப்பின் 17 தன்னார்வத் தொண்டுப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மனிதாபிமான செயற்பாட்டாளர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியைத் தோற்றுவித்தது. இது மனிதகுலத்தின் மீதான தாக்குதலாகவே சகலராலும் நோக்கப்பட்டது.

மூதூர் படுகொலையானது இலங்கையில் மனிதாபிமானப் பாதுகாப்பின் வீழ்ச்சிக்கான அடையாளமாக மாறியிருக்கிறது. 2007 ஆம் ஆண்டு நோர்வே அகதிகள் பேரவையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் 2006 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மனிதாபிமானப் பணிகளுக்கான இடைவெளி சுருங்கிவருவதாகச்சுட்டிக்காட்டப்பட்டிருந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழத்தமிழரை கைவிட்ட நிலை போன்று மலையகத் தமிழருக்கு வரக்கூடாது

- ஐ.நா வதிவிட பிரதிநிதியிடம் மனோகணேசன் வலியுறுத்து -

இறுதிக்கட்டப் போரின் போது ஈழத்தமிழர்களைக் கைவிட்டு, அந்தப்போர் சாட்சியம் இல்லாத போராக மாறுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை காரணமாக அமைந்தது. அதேபோன்று மலையக தமிழர்களையும் ஐ.நா. கைவிட்டுவிடக்கூடாது என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் ஐ.நா.வதிவிட ஒருங்கிணைப்பாளரிடத்தில் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வளாகத்தில் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளரும் ஐ.நா. செயலாளரின் நேரடி பிரதிநிதியுமான மார்க் அன்ரே பிரஞ்சேவுக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் எம்பி மற்றும் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் பாரத் அருள்சாமி ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இச்சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய மத்திய மலைநாட்டு பாதுகாப்பு அதிகார சபை என்ற பெயரில் அரசாங்கம், மலையக தமிழ் மக்களின் காணி உரிமையை மறுக்கும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றது. நீர் பிடிப்பு, புயல், வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை காலநிலை சார்ந்த காரணங்களைக் காண்பித்து, மலைநாட்டில் தமிழ் மக்களுக்கு உறுதியளிக்கப்பட்ட காணி உரிமையை மறுக்க அரசாங்கம் முயல்கிறதோ என்ற நியாயமான சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

இயற்கை காலநிலை காரணங்கள் எமக்கும் ஏற்புடையவைதான். ஆனால், மனிதர்கள் இயற்கையோடு இணைந்து எப்போதும் வாழ்ந்து வருகிறார்கள். ஒட்டுமொத்த மத்திய மலைநாட்டு மாவட்டங்களில் வாழும் சுமார் முப்பது இலட்சம் மக்களையும் அவ்விடங்களிலிருந்து வெளியேற்ற முடியாது. ஆகவே, ஏனைய அனைத்து இன மக்களுடனும் இணைந்து எமது மக்களும் காணி உரிமைகளைப் பெற்று அங்கேயே வாழ வழிசெய்யப்பட வேண்டும்.

குறிப்பாக நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை ஆகிய மத்திய மலைநாட்டு மாவட்டங்களில் வீதி ஓரங்களில் வீடமைப்பதற்கு காணி வழங்கப்பட வேண்டும். ஏனைய கீழ்நாட்டு பெருந்தோட்ட மாவட்டங்களில் வீதிகளுக்கு அண்மித்த சமவெளிப் பகுதிகளில் காணி வழங்கப்பட வேண்டும். காணி உரிமை இல்லாவிட்டால் எமது குடியுரிமை முழுமை அடையாது என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

இந்த புதிய மத்திய மலைநாட்டு பாதுகாப்பு அதிகார சபை என்ற யோசனைக்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய சர்வதேச அமைப்புகள் நிதி உதவி செய்வதாக அறிய வந்துள்ளது. இத்தகைய நிதி உதவிகளை நாம் வரவேற்கிறோம். ஆனால், இவை எமது மக்களின் காணி உரிமைக்கு குந்தகமாக அமைந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

மலையக பெருந்தோட்டங்கள் காடாக்கப்பட வேண்டும் என்ற, ஆளும் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் கடந்த கால கொள்கையை நாம் அறிவோம். அதனை மறைமுகமாக நடைமுறைப்படுத்தும் திட்டமாக இது இருக்குமோ என நாம் கேட்க விரும்புகிறோம்.

எனவே, இதில் ஐக்கிய நாடுகள் சபை உடனடியாகத்



தலையீடு செய்து, நியாயத்தை நிலைநாட்டி, மலைநாட்டில் தமிழ் மக்களுக்குக் காணி உரிமையை உறுதிப்படுத்தத் துணைநிற்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளோம் என்றார்.

கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட அருட்தந்தை ஜோன் ஹேர்பட்

- மட்டக்களப்பில் நினைவேந்தல் அனுஸ்டிப்பு -

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் மக்கள் மீதான மனித உரிமைமீறல்களுக்காகக் குரல் கொடுத்த நிலையில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட அருட்தந்தை ஜோன் ஹேர்பட்டின் 36வது ஆண்டு நினைவுதினம் இன்று (18) அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது அவருடன் காணாமலாக்கப்பட்ட அவரின் உதவியாளரான பேட்ரம் பிரான்சிஸ் நினைவுகூரப்பட்டார்.

ஊரணி சந்தியில் வாவிக்கரை பூங்காவுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அருட்தந்தையின் நினைவுத்தூபியில் இந்த நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

1923ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்த இவர், தனது 17 வயதில் இலங்கைக்கு வந்து தான் சாகும் வரை கிழக்கு மண்ணில் வாழ்ந்து, திருகோணமலை நகரத்து மண்ணுக்கும், மட்டக்களப்பு மண்ணுக்கும் கல்வித்துறை மற்றும் விளையாட்டுத்துறைகளுக்கு அளப்பரிய சேவையாற்றிய, இலங்கை தமிழர்களின் நியாயமான உரிமைக்காய் குரல் கொடுத்தவர் ஆவார்.

அமெரிக்காவில் பணக்காரக் குடும்பத்தில் பிறந்து மக்களுக்கு ஆன்மீகப் பணியாற்ற யேசு சபையில் இணைந்து அருட்தந்தை ஜோன் ஹேர்பட் மட்டகளப்பு புனித மிக்கேல் கல்லூரியில் தொடர்ந்த அடிகளாரின் சேவை, அந்தக் கல்லூரியை இலங்கையில் தேசிய ரீதியில் கூடைப்பந்தாட்டத்தில் "வெல்லப்பட முடியாத அணி" என்னும் நிலைக்கு உயர்த்தியது.

இதனை விட இலங்கையில் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் வந்தபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் மக்கள் மீதான மனித உரிமைமீறல்களுக்காக குரல்கொடுத்த, அருட்தந்தை 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி ஏறாவூர் பகுதியில் காணாமல் போயிருந்தார்.

அன்றைய தினம் வாழைச்சேனை பகுதியில் இராணுவத்தினராலும், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் முற்றுகையிடப்பட்டிருந்த தமிழ் மக்கள், கிறிஸ்தவ குருவானவர்கள், அருட்சகோதரிகள் போன்றோரை பாதுகாப்பான முறையில் வெளியேற்றிவிட்டு, தனது வாகன ஓட்டுநரான 'பேட்ரம் பிரான்சிஸ்' என்ற தமிழ் இளைஞருடன் மோட்டார் சைக்கிளில் வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்பு நகரை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தபோது, ஏறாவூர் பகுதியில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்.

அவரை நினைவுகூரும் வகையில் இன்று ஊரணியில் உள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நினைவேந்தல் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அருட்தந்தையர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.



